# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2018 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள், செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**நிகழ்ச்சி நிரல்**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிசேகபுரம் கோட்டம், வார்டு எண். 50க்குட்பட்ட தென்னூர் பிரதான சாலையானது பேருந்துகள் செல்லும் முக்கிய சாலையாகும். இச்சாலையானது மத்திய பேருந்து நிலையத்தினையும், சத்திரம் பேருந்து நிலையத்தினையும் இணைக்கும் முக்கிய சாலையாக உள்ளதால் பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்தி வருகிறார்கள். மேற்படி சாலையின் பாலத்தினை இணைக்கும் பகுதியில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்து ஆங்காங்கே குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படுவதுடன் விபத்துகள் ஏற்பட வாய்ப்பும் உள்ளது. இதுபோல் பாலத்தின் இருபுறமும் செல்லும் சர்வீஸ் சாலைகளும் மிகவும், பழுதடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் சிரமம் ஏற்படுகிறது. எனவே தென்னூர் பிரதான சாலை மேம்பாலம் சாலை மற்றும் இருபுறமும் செல்லும் சர்வீஸ் சாலைகளை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார் சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2018–19ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பழைய தார்சாலைகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.500.00 **இலட்சத்தில்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/3873/2018(மையம்)**

**தீர்மானம் எண்.157 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ–அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.52க்குட்பட்ட பாரதி நகர் குறுக்கு தெருக்களுக்கு மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார் சாலை மேம்படுத்தும் பணியினை மதிப்பீடு தொகை ரூ.49.85 இலட்சத்திற்கு இப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.344/2017–18ன் வாயிலாக 08.05.2018 அன்று முதன் முறையாக மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியினை மைய அலுவலக பொறியியர் பிரிவில் உள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியிலும், மின்னனு முறையிலும் சமர்ப்பித்துள்ளனர். வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மீது

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் / ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ–அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.52க்குட்பட்ட பாரதி நகர் குறுக்கு தெருக்களுக்கு மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார் சாலை மேம்படுத்தும் பணி<br>மதிப்பீடு ரூ.49.85 இலட்சம் | 1. திரு. C.K. ராஜன், திருச்சி 0.03 % குறைவு<br>2. மெசர்ஸ். NS & Co., திருச்சி 1.34 % அதிகம்<br>3. திரு. எஸ். கணேசன், திருச்சி (தொழில்நுட்ப தகுதி பெறவில்லை) | மொத்தம் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.C.K. ராஜன், திருச்சி** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.03 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு கலம் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரையினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[ இ2/1130/2018(மையம்) ]**

**தீர்மானம் எண்.158 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிசேகபுரம் கோட்டம், வார்டு எண்.53க்குட்பட்ட சண்முகா நகர் பிரதான சாலையின் மேற்கு பகுதியில் 4, 5 மற்றும் 6வது குறுக்கு தெருக்களில் தற்போது உள்ள சாலை மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளது. இதனால் மழை காலங்களில் மழை நீர் சாலைகளில் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட குறுக்கு தெருக்களுக்கு மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார் சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.30.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2018–19ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பழைய தார்சாலைகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.500.00 **இலட்சத்தில்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/3875/2018(மையம்)**

**தீர்மானம் எண்.159 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் மற்றும் அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் **அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றம் திட்டம் 2017–2020** கீழ் மேற்கொள்வதற்கு, கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.**370/2017-18**ன் வாயிலாக **28.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்துபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.38க்குட்பட்ட சத்தியவானி முத்து தெருவில் உள்ள பூங்காவில் நடைபாதை அமைக்கும் பணி, பூங்கா அமைத்தல், முகப்பு வளைவு, எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல், விளையாட்டு சாதனங்கள், குடிநீர், கண்காணிப்பு கேமரா, திடக்கழிவு தொட்டி, சுவர் ஓவியம் வரைதல் HDPE Drinking Water Storage, காவலர் அறை கட்டுதல், யோகா மையம் கட்டுதல், கழிப்பிடம் கட்டுதல் மற்றும் உடல் ஊனமுற்றோர்க்கான கழிப்பிடம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்தல்,<br>**மதிப்பீடு ரூ.56.80 இலட்சம்** | **1. திரு.எம். பாபுராஜ் 0.06 % குறைவு**<br><br>2. திரு.பி. வேலுச்சாமி, 0.94 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எம். பாபுராஜ்** ஒப்பந்ததாரா் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.38க்குட்பட்ட லிங்கம் தெருவில் உள்ள பூங்காவில் சுற்றுச்சுவர் கட்டி நடைபாதை அமைக்கும் பணி, பூங்கா அமைத்தல், முகப்பு வளைவு, எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல், விளையாட்டு சாதனங்கள், குடிநீர், கண்காணிப்பு கேமரா, திடக்கழிவு தொட்டி, சுவர் ஓவியம் வரைதல் HDPE Drinking Water Storage, காவலர் அறை கட்டுதல், யோகா மையம் கட்டுதல், கழிப்பிடம் கட்டுதல் மற்றும் உடல் ஊனமுற்றோர்க்கான கழிப்பிடம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்தல்,<br>**மதிப்பீடு ரூ.75.50 இலட்சம்** | **1. திரு.கே. ஜெயராமன், 0.07 % குறைவு**<br><br>2. மெசர்ஸ். அம்மன் பில்டர்ஸ், 2.00 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.கே. ஜெயராமன்,** ஒப்பந்ததாரா் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.07 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு கலம் எண் 4ல் கண்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

**(இ2/1235/2018 (மையம்)**

**தீர்மானம் எண்.160 (பொருள்—4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைகோட்டம் வார்டு எண் **36**ல் உள்ள ஜெ.ஜெ. நகர், பொன்மலைப்பட்டியில், வார்டு எண் **31**, மற்றும் **36**க்குரிய குப்பைகளை தரம் பிரித்து உரமாக மாற்றம் செய்ய நுண் உரக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் உரக்கிடங்கில் பணிபுரியும் சுய உதவி குழு பணியாளர்களுக்கு **31.03.2018** வரை ஒப்புதலை அளிக்கப்பட்டு குழு மூலம் மனித ஆற்றல்கள் பெறப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | நுண் உரக்கிடங்கு அமைவிடம் | பணியாளர்கள் எண்ணிக்கை | கால நீட்டிப்பு | செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 31, 36 | ஜெ.ஜெ.நகர் | 25 | 01.04.2018 முதல் 31.03.2019 | 295X13.36=ரூ.39/—<br>295+39=ரூ.334X30X25<br>=ரூ.2,50,500/-X12=ரூ.30,06,000/- |

மேற்காணும் அட்டவணை கலம் **6**ல் தெரிவித்துள்ள ஊதியத்தின்படி **01.04.2018** முதல் **31.03.2019** வரை உரக்கிடங்கு பணியின் அவசியம் கருதி மேற்கண்ட சுய உதவி குழுக்களுக்கு கால நீட்டிப்பு வழங்கியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்த ஊதியம் வழங்க அனுமதியும் வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. 2018-2019ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் மாநகராட்சி வருவாய் நிதி கணக்குத் தலைப்பு எண்.2105/1-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/10458/2017(பொன்)**

**தீர்மானம் எண்.161 (பொருள்—5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைகோட்டம் வார்டு எண் **37**ல் உள்ள காமராஜ் நகர் ஏர்போர்ட்டில், வார்டு எண் **35**, மற்றும் **37**க்குரிய குப்பைகளை தரம் பிரித்து உரமாக மாற்றம் செய்ய நுண் உரக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் உரக்கிடங்கில் பணிபுரியும் சுய உதவி குழு பணியாளர்களுக்கு **31.03.2018** வரை ஒப்புதலை அளிக்கப்பட்டு குழு மூலம் மனித ஆற்றல்கள் பெறப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | நுண் உரக்கிடங்கு அமைவிடம் | பணியாளர்கள் எண்ணிக்கை | கால நீட்டிப்பு | செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 35, 37 | காமராஜ் நகர் | 30 | 01.04.2018 முதல் 31.03.2019 | 295X13.36=ரூ.39/—<br>295+39=ரூ.334X30X30<br>=ரூ.3,00,600 X12=ரூ.36,07,200/- |

மேற்காணும் அட்டவணை கலம் 6ல் தெரிவித்துள்ள ஊதியத்தின்படி 01.04.2018 முதல் 31.03.2019 வரை உரக்கிடங்கு பணியின் அவசியம் கருதி மேற்கண்ட சுய உதவி குழுக்களுக்கு கால நீட்டிப்பு வழங்கியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்த ஊதியம் வழங்க அனுமதியும் வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :-**</u>

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. 2018-2019ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் மாநகராட்சி வருவாய் நிதி கணக்குத் தலைப்பு எண்.2105/1-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/10458/2017(பொன்)**

**தீர்மானம் எண்.162 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைகோட்டம் வார்டு எண் 44ல் உள்ள பறவைகள் சாலையில், வார்டு எண் 44க்குரிய குப்பைகளை தரம் பிரித்து உரமாக மாற்றம் செய்ய நுண் உரக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் உரக்கிடங்கில் பணிபுரியும் சுய உதவி குழு பணியாளர்களுக்கு 31.03.2018 வரை ஒப்புதலை அளிக்கப்பட்டு குழு மூலம் மனித ஆற்றல்கள் பெறப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | நுண் உரக்கிடங்கு அமைவிடம் | பணியாளர்கள் எண்ணிக்கை | கால நீட்டிப்பு | செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 44 | பறவைகள் சாலை | 25 | 01.04.2018 முதல் 31.03.2019 | 295X13.36=ரூ.39/–<br>295+39=ரூ.334X30X25<br>=ரூ.2,50,500 X12=%.30,06,000/- |

மேற்காணும் அட்டவணை கலம் 6ல் தெரிவித்துள்ள ஊதியத்தின்படி 01.04.2018 முதல் 31.03.2019 வரை உரக்கிடங்கு பணியின் அவசியம் கருதி மேற்கண்ட சுய உதவி குழுக்களுக்கு கால நீட்டிப்பு வழங்கியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்த ஊதியம் வழங்க அனுமதியும் வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :-**</u>

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. 2018-2019ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் மாநகராட்சி வருவாய் நிதி கணக்குத் தலைப்பு எண்.2105/1-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/10458/2017(பொன்)**

**தீர்மானம் எண்.163 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 389 / 2017-18) ஒப்பந்தப்புள்ளிகள் 17.04.2018 அன்று முதன் முறையாக கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி 2017-18** | | | |
| 1 | அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 61க்குட்பட்ட பர்மா காலனி மனைப்பிரிவில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ.31.90 லட்சம் | சி. தனபால்<br>பி.வேலுச்சாமி | 0.06% குறைவு<br>1.95% கூடுதல் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.சி. தனபால், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 சதவீதம் குறைவான** விலை விகிதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு கலம் எண் 5ல் குறைந்த ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[ இ3/2842/2018/மையம்]**

**தீர்மானம் எண்.164 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் ஸ்வச் சர்வேக்ஸான் 2016ல் 3வது இடமும், ஸ்வச் சர்வேக்ஸான் 2017ல் 6வது இடம் பெற்று இம்மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தில் ஸ்வச் சர்வேக்ஸன் 2018ல் மதிப்பெண்கள் 4000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தூய்மை இந்தியா இயக்கம் தொடர்பான பயன்பாட்டினை பொதுமக்கள் மூலம் கருத்தரிந்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், Swachh Suverkshan 2018 கணக்கெடுப்பு புத்தகம் தயார் செய்யவும் மற்றும் தூய்மை தொடர்பன விளம்பரம், ஸ்டிக்கர் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 1.54 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு. KMK. பைஜீர் ரஜ்மான், ஒப்பந்ததாரர் அவர்கள் மூலம் 1994 ஆம்

ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ7/4007/2018(மையம் )**

**தீர்மானம் எண்.165 (பொருள்–9) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 10**

மாமன்றம் தனது தீர்மானம் எண் 9, நாள் 30.1.2013 ல் இம்மாநகராட்சி தொடர்பான வழக்குகளை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்காடுவதற்கு மதுரை கிளையில் வழக்குரைஞர்களாக பணிபுரிந்து வந்த திரு.என்.எஸ். கார்த்திகேயன் மற்றும் திரு.எல். மதுசூதனன் ஆகிய இருவரை மாநகராட்சி வழக்குரைஞர்களாக நியமனம் செய்யப்படும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு பணிபுரிய ஏதுவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் இவ்விருவரையும் மாநகராட்சி உயர்நீதி மன்ற வழக்குரைஞர்களாக இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.3803/2012/சி1(மையம்) நாள்.19.12.2012 வாயிலாக பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

இந்நிலையில் திரு. எல். மதுசூதனன், மாநகராட்சி வழக்குரைஞர் என்பவர் எதிர்பாராத வாகன விபத்தில் மரணம் அடைந்ததனையடுத்து இவர் வசம் இருந்து வந்த மாநகராட்சி வழக்குகள் யாவும் கூடுதலாக திரு. என். எஸ். கார்த்திகேயன் மாநகராட்சி வழக்குரைஞருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் 25.04.2018 அன்று இணை இயக்குநர் (நிர்வாகம்), நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் நடத்தப்பட்ட நிலுவை வழக்குகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நிலுவையில் உள்ள வழக்குகளில் உயர்நீதி மன்ற மதுரை கிளையில் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர்களை பிரதிவாதியாக தொடரப்பட்ட வழக்குகளை விரைவில் முடிக்க பல்வேறு அறிவுரைகள் பெறப்பட்டதில், அதில் தேவைப்பட்டால் கூடுதலாக ஒரு வழக்கறிஞரை நியமித்து வக்காலத்து தாக்கல் செய்து உடன் ஊடிரவேநச ஹககனையளவை தாக்கல் செய்தும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்க அறிவுரைகள் பெறப்பட்டுள்ளதன் மீது உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கண்காணிப்பாளர், நிர்வாகப் பிரிவு, அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு புதிதாக ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்வது தொடர்பாக தலைவர், பார்அசோசியேஷன், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்களை வழக்கறிஞர்களை உரிய விவரங்களுடன் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்திற்கு விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. தலைவர், பார்அசோசியேஷன், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தினைத் தொடர்ந்து மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்குரைஞராகப் பணிபுரிந்து வரும் திரு.எஸ். சாஜி பினோ, 52 சட்ட அறை, மதுரை உயர்நீதிமன்ற கிளை, அவர்களிடமிருந்து 07.05.2018 அன்று விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்குரைஞர் விண்ணப்பத்தில் அவர் தூத்துக்குடி மாநகராட்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவதாகத் தெரிவித்துள்ளதால் அவரது செயல்பாடுகள் குறித்து தூத்துக்குடி மாநகராட்சியில் விவரம்

கோரப்பட்டது. அவரது செயல்பாடுகள் சிறப்பாக உள்ளதாக தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது.

எனவே, திரு.எஸ். சாஜி பினோ, வழக்குரைஞர் அவர்களை நியமனம் செய்யும் நாளில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஏற்கனவே திரு.என்.எஸ். கார்த்திகேயன் வழக்குரைஞரை பணியமர்த்தி ஆணையிடப்பட்ட அதே நிபந்தனைகள் மற்றும் அவருக்கு வழங்கப்பட்டு வரும் அதே வழக்குக் கட்டணம் வழங்கி பணியமர்த்திடவும், புதிதாக பணியமர்த்தப்படும் இவருக்கு ஸ்ரீரங்கம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்ட அலுவலகம் தொடர்பான வழக்குகளை வழக்காட ஒப்படைப்பதற்கும் ஏதுவாக தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) ஒப்புதல் வழங்கலாம்.
2) திரு.என்.எஸ். கார்த்திகேயன், வழக்குரைஞர், மைய அலுவலகம், பொன்மலை மற்றும் அரியமங்கலம் கோட்டம் தொடர்பான வழக்குகளை எதிர்வழக்காடவும், திரு.எஸ். சாஜி பினோ அவர்கள் ஸ்ரீரங்கம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்ட அலுவலகங்களின் வழக்குகளை எதிர்வழக்காடவும், இது தொடர்பான இக்கோட்டங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை திரு.எஸ். சாஜி பினோ அவர்களிடம் தொடர் வழக்காட ஒப்படைப்பு செய்யவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்.8847/2017சி1(மையம்))**

**தீர்மானம் எண்.166 (பொருள்–10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**